# 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி சாதனை படைத்துள்ளோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சாதனையைச் செய்தது, திராவிட மாடல்! ஒன்றிய அரசே நிதி தர மறுத்து புறக்கணித்தாலும், அவர்கள் வெளியிடும் புள்ளிவிவரங்களில் எல்லாம் தவிர்க்கவே முடியாத அளவிற்கு முதலிடத்தில் இருக்கும் சாதனையைச் செய்தது, நம்முடைய திராவிட மாடல் அரசு!

தமிழ்நாட்டின் கஜானாவைச் சுரண்டிய கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியாளர்கள், மக்களால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், என்ன என்னவெல்லாம் சொன்னார்கள். நாம் மகளிருக்கான உரிமைத் தொகையை வழங்க மாட்டோம் என்று சொன்னார்கள்! ஆனால், அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறோம் - செய்து கொடுத்திருக்கிறோம் - செய்து கொண்டிருக்கிறோம். ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அக்கவுண்ட்டில் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து என்ன சொன்னார்கள், போக்குவரத்துத் துறை நஷ்டத்தில் இயங்குகிறது, இதில் எங்கே இலவசப் பயணம் வழங்கப்போகிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த மறுநாளே, பெண்கள் எல்லோரும் நகரப் பேருந்துகளில் விடியல் பயணம் செய்ய முதல் கோப்பில், முதல் கையெழுத்திட்டவன்தான் இந்த ஸ்டாலின்!

சொன்னதை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவை என்று தோன்றியது என்றால், அது நாங்கள் சொல்லாததாக இருந்தாலும் செய்து கொண்டிருக்கிறோம்!

### அகில இந்தியாவே பாராட்டும் கழக அரசின் திட்டங்கள்!

தினமும் காலையில், 21 இலட்சம் குழந்தைகள் வயிறாரச் சாப்பிடும் காலை உணவுத் திட்டம், தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டமா?

48 இலட்சம் மாணவ - மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திருக்கும் நான் முதல்வன் திட்டம், தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டமா? இல்லையே. ஆனால், இதையெல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிற்குத் தேவை. நம்முடைய பிள்ளைகளுக்குத் தேவை என்று அதைக் கொண்டு வந்தோம்! நாளைக்கு நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து, மாணவர்களாக படித்து, பெரிய பெரிய வேலைகளில் உட்காரும் போது, இந்த திட்டங்களைச் செயல்படுத்தியதற்காக நம்முடைய திராவிட மாடல் அரசை பாராட்டுவார்கள்!

### ரெக்கார்டை 'பிரேக்' செய்ய முடியாத அளவுக்குச் செய்வதே எனது பாலிசி!

இன்னும் சொல்கிறேன். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்று சொன்னாலே, பல தொழில் நிறுவனங்கள் பின்னங்கால் பிடரியில் அடிபட்டு தலைதெறிக்க ஓடினார்கள். ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், 10 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை நாம் ஈர்த்திருக்கிறோம்! ரெக்கார்ட் செய்தால், ரெக்கார்டை பிரேக் செய்ய முடியாத அளவிற்கு செய்ய வேண்டும்! இதுதான் என் பாலிசி!

இன்னும்கூட சொல்கிறேன். 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு - 4000 கோயில்களில் குடமுழுக்கு - 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலான கோயில் சொத்துகள் மீட்டிருக்கிறோம் - அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகாலக் கோரிக்கையான பென்ஷன் திட்டம் - கடந்த நான்கரை ஆண்டுகளில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு முறை, மூன்று முறை நாம் பயணம் செய்து, அரசு விழாக்கள் மூலமாக, 40 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறோம்.

இப்போதுகூட, இந்தப் பொங்கல், மகிழ்ச்சிப் பொங்கலாக இருக்கவேண்டும் - அதற்காகத் தான் பொங்கல் பரிசாக 3 ஆயிரம் ரூபாய் தருகிறோம்!

இப்படி உங்கள் தேவைகளை உணர்ந்து, நல்ல பல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கும் உங்கள் திராவிட மாடல் அரசிடம், உங்களுடைய கனவுகளை நீங்களே சொல்ல வேண்டும் என்று உருவாக்கியிருப்பதுதான், இந்த 'உங்க கனவ சொல்லுங்க'திட்டம்!

இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள் - இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களையும், அரசின் சார்பாக நியமிக்கப்படுகின்ற தன்னார்வலர்கள், எங்கள் Team-ஐ சேர்ந்தவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளைச் சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள்! அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன்! 2030-ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை கொண்டதாக, அந்த கனவுத்திட்டம் இருக்கும்! நான் உறுதியாக சொல்கிறேன். இந்தக் கனவுகளை எல்லாம் நான் நிறைவேற்றிக் காட்டும்போது,

- கிராமப்புற உள்கட்டமைப்புகள்
- நகர்ப்புற உள்கட்டமைப்புகள்
- மொழி மற்றும் பண்பாட்டு வெற்றிகள்
- கல்வி மற்றும் திறன் மேம்பாடுகள்
- சமூகங்களின் வளர்ச்சி
- விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்
- வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய ஏழு துறைகளில், தன்னிறைவு பெற்ற தமிழ்நாடாக நம்முடைய மாநிலம் வளர்ந்திருக்கும்!

**இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள் - இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களையும், அரசின் சார்பாக நியமிக்கப்படுகின்ற தன்னார்வலர்கள், எங்கள் Team-ஐ சேர்ந்தவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளைச் சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள்! அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன்! 2030-ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை கொண்டதாக, அந்த கனவுத்திட்டம் இருக்கும்! நான் உறுதியாக சொல்கிறேன்.**

## 7 முக்கியத் துறைகளில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவோம்!

### ஒரு இனத்தின் ஆட்சி இது!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் சொல்வார்கள்; "மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்; அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு; அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டுமானம் செய்! பணி முடிந்த பிறகு அவர்களுக்கு திருப்தியை ஏற்படுத்திவிட்டுத் திரும்பி வா" என்று சொன்னார். அண்ணா சொன்னதை எல்லாம், என்னுடைய இதயத்தில் வைத்து, செயல்படக் கூடியவன் தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! அதனால் தான், ஒரு கட்சியின் ஆட்சியாக இல்லாமல், ஒரு இனத்தின் ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்!

### உங்கள் கனவுகள் நிறைவேறினால் தமிழ்நாடு முன்னேறும்!

ஆட்சி என்பது, முதலமைச்சரான என்னுடைய கனவுகளை மட்டுமல்ல, வாக்களித்த, வாக்களிக்காத உங்கள் எல்லோருடைய கனவுகளையும் நிறைவேற்றுவதற்கான கருவி! அப்படி, உங்கள் கனவுகளைக் கேட்டு, நிறைவேற்றும்போதுதான், உங்கள் குடும்பங்கள் முன்னேறும்! மகிழ்ச்சி அடையும்! உங்கள் கனவுகள் நிறைவேறினால், தமிழ்நாடும் முன்னேறும்! வளர்ச்சி அடையும்!

வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். நாம் கனவு கண்டால், நிச்சயம் நம்முடைய உழைப்பால் அதை நிறைவேற்றுவோம்!

சுயமரியாதையும் - சமத்துவமும் - பகுத்தறிவுமிக்க சமூகமாக, நம்முடைய தமிழ்ச் சமூகம் தலைநிமிர வேண்டும்; சமூகநீதி நிலைபெற வேண்டும்; ஒடுக்கப்பட்டோரின் குரல்கள் கேட்கப்பட வேண்டும்; எல்லோருக்குமான ஆட்சி அமைய வேண்டும் என்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் கனவு கண்டார்கள்! அதனால்தான் இன்றைக்கு நாம், எந்த ஆதிக்கத்திற்கும் தலைகுனியாமல் - வெல்வோம் ஒன்றாக என்று மண், மொழி, மானம் காக்க, நிமிர்ந்து நிற்கிறோம்! நாடே திரும்பிப் பார்க்கும் நம்பர் ஒன் மாநிலமாக இருக்கிறோம்!

### தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக உயர்த்துவேன்!

இப்போது நாம் அடுத்தகட்ட கனவை காணவேண்டிய நேரம்! உறுதியாகச் சொல்கிறேன் - உங்கள் கனவுகளை நான் நிறைவேற்றுவேன்! உங்கள் கோரிக்கைகளை நான் திட்டங்களாக உருவாக்கித் தருவேன். உங்கள் எண்ணங்களுக்கு நான் உருவம் கொடுப்பேன். நம்முடைய தமிழ்நாட்டை, தலைசிறந்த மாநிலமாக உயர்த்துவேன்! இதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 2026 தேர்தலுக்குத் தரக்கூடிய வாக்குறுதி! நம்முடைய கனவு நனவாகும்! தமிழ்நாடு வெல்லும்! வெல்லும்! வெல்லும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் - திருவரங்குளத்தில் மாபெரும் கபடி போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தனர்!

*புதுக்கோட்டை, ஜன. 11-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளத்தில் துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருவரங்குளம் தெற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மின்னொளி கபாடி போட்டி பிடாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. விழாவிற்கு தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் அரு.வடிவேல் தலைமை தாங்கினார்.

மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி, திருவரங்குளம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கபாடி போட்டியை துவக்கி வைத்தார். புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான கபடி அணியினர் கலந்து கொண்டு முதல் பரிசு ரூபாய் 48,000, இரண்டாம் பரிசு 38 ஆயிரம், மூன்றாம் பரிசு 28000, நான்காம் பரிசு 18000 ஆயிரத்தை தட்டிச் செல்வதற்கான வீர விளையாட்டான கபடி ஆட்டம் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இதில் முதல் பரிசு புதுக்கோட்டை மாவட்டம் பூங்குடி இளம் பறவை கபடி அணியினரும், இரண்டாம் பரிசு தஞ்சாவூர் மாவட்டம் சென்னம்பட்டி இளம் பூக்கள் அணியினரும், மூன்றாம் பரிசு திருவரங் குளம் மூவேந்தர் கபடி அணியினரும், நான்காம் பரிசு , அரியாணிபட்டி புதிய பறவை கபடி அணியினரும் பெற்றனர். ரொக்கப் பரிசு மற்றும் கோப்பையினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கி சிறந்த ஆட்டக்காரர்களுக்கு ரொக்க பரிசை வழங்கினார்.

மற்றும் வெற்றி பெற்ற அணி வீரர்களுடன் குழு போட்டோ எடுத்துக் கொண்டார். மிகப் பிரமாண்டமான முறையில். சிறப்பான ஏற்பாடுகளை செய்த திருவரங்குளம் தெற்கு ஒன்றிய கழக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பால பிரபாகரன், பா.அஜய் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகளை பாராட்டினார்.

இரண்டு நாள் நடைபெற்ற மின்னொளி கபடி போட்டி நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. பிரதிநிதி எம்.எஸ். முருகன், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம்,தெற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஓய்வு ஆசிரியர் ஆறுமுகம், தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.வி. சண்முகசுந்தரம், பிரசாந்த், சுமதி கருப்பையா, எஸ்.எம்.குமரேசன், ஜெய்சங்கர் ஒன்றிய பொருளாளர மாவட்ட பிரதிநிதி வீர.மெய்யர், திருவரங்குளம் தெற்கு ரத வீதி வை.ராஜா, ஒன்றிய பிரதிநிதி என்.ஆத்மநாதன், நிருபர் எஸ்.பாலு, கோவை என்.முத்துக்குமார், முகமது கனி, சிங்கராஜன், நின்பநேஸ் வரம் காயாம்பூ, துரை.மெய்யர், திருக்கட்டளை சி.முத்துக் குமார், வக்கீல் பூங்குடி எம்.சிவா கண்ணதாசன், ராஜா சரவணன், வீர.பாலாஜி, ஆர்.வி.செல்வம், உஷா செல்வம், கே.பி. கே.டி. கலை, வம்பன் நாள் ரோடு.ஆர்.எம்.அயுப்கான், பரமசிவம், ராஜா பெரியண்ணன் பாலையூர், வெள்ளைச்சாமி, காயாம்பட்டி பாண்டியராஜன், வேப்பங்குடி ராஜாங்கம், கொத்தகோட்டை பிரகதாம்பாள், புதுக்கோட்டை கார்த்திக் மெஸ் மூர்த்தி, மேட்டுப்பட்டி சின்னத் துரை, பொன்னகர் செந்தில் குமார், லோகேஷ் செந்தில், மகளிர் அணி விஜயா, சாந்தி, பாண்டியம்மாள், இளைஞரணி நிர்வாகிகள் வி.மணி கண்டன், ஆர்.பாலமுருகன், சிவா, சிராஜ், சேதுராமன், ஆர்.ஸ்டாலின், ஏ.விஜயகுமார், கே.ரெங்கராஜ், கே. எம்.ஆர்.ஆனந்த், ஹனிபா, மணிகண்டன், ரவி, மகேஷ், கண்ணன், சஞ்சய் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை ஒன்றிய இளைஞரணி சார்பில் துணை அமைப்பாளர்கள் பால.பிரபாகரன், பா அஜய் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் செய்திருந்தனர். இதில் மாவட்ட ஒன்றிய பேரூர் கழக கிளைக் கழக நிர்வாகிகள் இளைஞர் மகளிர் பொதுமக்கள் கலந்து கொண்டு கபடி போட்டிகளை கண்டுகளித்தனர்.

இளைஞர் அணி ஆர். மணிகண்டன் நன்றி கூறினார்.



ஈரோடு மாநகராட்சி திண்டல் காரப்பாறையில் விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன், மாமன்ற உறுப்பினர் கீர்த்தனா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

---

### திருச்சி மாநகராட்சி மேற்கு சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.9244.25 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்!

*திருச்சி, ஜன. 11 -*

திருச்சி மாநகராட்சி மேற்கு சட்டமன்ற தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி அரசு திட்ட நிதி மற்றும் மாநகராட்சி நிதியின் கீழ் 9244. 25 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து புதிய பணிகள் தொடங்குவதற்கு தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்.

அதன்படி இன்று காலை ரூ. 1493 லட்சம் மதிப்பில் திருச்சியை அடுத்த கம்பரசம் பேட்டை காவேரி ஆற்றுப்பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையம், ரூ. 2,249 லட்சம் மதிப்பில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கம்பரசம்பேட்டை தலைமை நீர்ப்பணி நிலையம் பகுதியில் அமைந்துள்ள பெரியார் நகர் நீர் சேமிப்பு கிணற்றிலிருந்து அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக குடிநீர் உந்து குழாய் பதித்தல் பணி, உறையூர் அண்ணாநகர் மற்றும் தில்லைநகர் பகுதியில் புதிதாக ரூ. 2,128 லட்சம் மதிப்பில் புதிதாக 20 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட முதன்மை சமநிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் 25 லட்சம் மதிப்பில் வார்டு 9 ல் பல்நோக்கு அலுவலக கட்டிடம் திறப்பு,

வார்டு 22ல் வாமடம் பகுதியில் ரூ.13 லட்சம் மதிப்பில் உடற்பயிற்சி கூடம் கட்டிடம், ரூ 12 லட்சம் மதிப்பில் படிப்பாக கட்டிடம், ரூ660 லட்சம் மதிப்பில் வார்டு 29 ல் தென்னூர் அண்ணாநகர் அக்பர் தெரு மேட்டு தெரு பள்ளியினை இடமாற்றம் செய்து மாநகராட்சி நடுநிலைப்பள்ளி புதிய கட்டிடம் கட்டும் பணி, ரூ210 லட்சம் செலவில் வார்டு 28 ல் குழுமக் கரையில் புதிய எரிவாயு தகன மையம் திறப்பு விழா, வார்டு 26 ல் வண்ணாரப் பேட்டையில் ரூ 25 லட்சம் மதிப்பில் பல் நோக்கு அலுவலக கட்டிடம் மற்றும் வார்டு 26 ல் குமரன் நகரில் பேருந்து நிழற் கூடை ரூ.10 லட்சம் மதிப்பில், வார்டு 25ல் கீதா நகர் பகுதியில் ரூ. 10 லட்சம் மதிப்பில் பேருந்து நிழற்குடை, வார்டு 58 ல் கருமண்டபம் தெற்கு பகுதியில் ரூபாய் 31.25 லட்சம் மதிப்பில் புதிய நவீன பொது கழிப்பிடம் திறப்பு விழா, வார்டு 55 ல் திண்டுக்கல் மெயின் ரோடு விநாயகர் நகரில் ரூ. 10 லட்சம் செலவில் பேருந்து நிழற்குடை, வார்டு 55ல் 160 லட்சம் மதிப்பில் பிராட்டியூர் வீதியில் புதிய எரிவாயு தகன மையம் ஆகியவற்றை அமைச்சர் கே. என். நேரு திறந்து வைத்தார்.

இதையடுத்து வார்டு 58 ல் ரூ150 லட்சம் மதிப்பில் ராஜராஜன் நகரில் புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டும் பணிக்கு வார்டு 57 ல் ரூ193 லட்சம் மதிப்பில் புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல் ஆகியவற்றை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். பிறகு வார்டு 57ல் எடமலைப்பட்டி புதூர் முருகன் கோவில் தெருவில் பல்நோக்கு அலுவலக கட்டிடம், மதுரை ரோடு ராமச்சந்திர நகர் அருகில் பல் நோக்கு அலுவலக கட்டிடம் ஆகியவற்றை அமைச்சர் கே.என். நேரு திறந்து வைத்தார். மாலை 4 மணி அளவில் வார்டு 62 ல் ஆம்னி பேருந்து நிலையம் திறந்து வைக்கிறார்.

இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை 20 இடங்களுக்கு சென்று அமைச்சர் பெயர் நேரு பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளையும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் மாவட்ட கலெக்டர் சரவணன் மாநகராட்சி ஆணையர் மதுபாலன், நகர பொறியாளர் சிவபாதம், மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளர் மாநகராட்சி மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், மத்திய மாவட்டம் முன்னாள் துணைச் செயலாளர் குடமுருட்டி சேகர், பொருளாளர் துரைராஜ், ஒன்றிய செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்தநல்லூர் கதிர்வேல், பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ், காஜாமலை விஜய், நாகராஜன், கமால் முஸ்தபா, ராம்குமார், வக்கீல் இளங்கோ, மாநகர அயலக அணி அமைப்பாளர் துபேல் அகமது, வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.ஆர்.சிங்காரம், மத்திய மாவட்ட வர்த்தகர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் தொழிலதிபர் ஜான்சன் குமார், முன்னாள் பகுதி செயலாளர் தில்லை நகர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம், புத்தூர் தர்மராஜ், திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, மாநகரத் துணைச் செயலாளர் கவுன்சிலர் கலைச்செல்வி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

# தலைமையா அடிமையா...



**அ**ழைத்தால் ஓடுகிற ஒரு அடிமையிடம்
ஆட்சி அகப்பட்டால்

அது மாநில ஆட்சியாக இருக்காது

கோமாளிகளின் காட்சியாகத் தான் இருக்கும்...

மேலும்

சுயமரியாதை பூகோளமான தமிழ்நாட்டின் வாக்காளர்கள்

ஒருபோதும் தங்களை ஆள்வதற்கு

ஒரு அடிமையை தேர்வு செய்ய மாட்டார்கள்..



**மருது அழகுராஜ்**

கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்